ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 1778/42 - 2012 ඔක්තෝබර් මස 05 වැනි සිකුරාදා - 2012.10.05
*1778/42 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

### மதுவரிக் கட்டளைச் சட்டம்

*மதுவரி அறிவித்தல் இல. 956*

**மருந்துப்பொருள் உற்பத்தித் தயாரிப்புகளுக்காகவும் மற்றும் பிற பாவனைக்காகவும் அங்கீகரிக்கப்பட்ட கைத்தொழில்களில் பயன்படுத்தப்படும் மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) மீதான தீர்வை வரி**

*காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம் ) 22 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் அமைச்சர் அவர்களினால் ஆக்கப்பட்ட கட்டளை.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2012, ஒற்றோபர் 5.*

### கட்டளை

*1. இதனகத்துக்குப் பின்னர் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் நிரல் I இல் குறிப்பீடு செய்யப்பட்ட பொருட்கள் மீதான தீர்வை, அவ்வட்டவணையின நிரல் II இல் குறிப்பீடு செய்யப்பட்ட விகிதத்தில் 2012, ஒற்றோபர் 6 ஆந் திகதியிலிருந்து பயன்வலுப்பெறும் வகையில் விதிக்கப்படுதல் வேண்டும்.*

*2. ஏதேனும் பிற அறிவித்தல்களுக்கு எதுவும் முரண்படாத வகையில் அத்தகைய மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது வடிசாலையிலிருந்து, மொத்த களஞ்சியசாலையிலிருந்து உள்ளூர் உற்பத்திசாலையிலிருந்து விடுவிக்கப்படும் போது இத் தீர்வைகள் செலுத்தப்படுதல் வேண்டும்.*

*3. 2011, மாச்சு மாதம் 30 ஆந் திகதிய 1751/30 ஆம் இலக்கம் கொண்ட இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மதுவரி அறிவித்தல் இல. 951 இரத்துச் செய்யப்படுகிறது.*

*அட்டவணை*

| | நிரல் I<br>பொருட்கள் | நிரல் II<br>தீர்வை விகிதம் |
|---|---|---|
| 1. | அரசாங்க திணைக்களங்கள், வைத்தியசாலைகள், அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்களினால் அல்லது வேறுவகையில் மதுவரி செலுத்தப்பட வேண்டிய உரிமம் பெற்ற குடிபான மதுபான தயாரிப்பாளர்களினால் பயன்படுத்தப்படும் மதுசாரம் (ஈதைல் அற்ககோல்). | இல்லை |
| 2. | மதுசாரம் உள்ளடங்கிய மருந்துப் பொருட்களை உற்பத்தி செய்வதுடன், கைத்தொழிலுக்காகப் பயன்படுத்தப்படும் மற்றும் முடிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களின் மூலம் பயன்படுத்தப்படுகின்ற மதுசாரம் (ஈதைல் அற்ககோல்) பொருட்டு பின்வரும் வரையறைகளின்படி-<br>(i) மாதமொன்றுக்கு லீற்றர் 10,000 வரை<br>(ii) மாதமொன்றுக்கு 10,001 முதல் 20,000 லீற்றர் வரை<br>(iii) மாதமொன்றுக்கு 20,000 லீற்றரை விஞ்சும் போது<br>(மீள் வடிப்புக்காக பயன்படுத்தப்படுகின்ற ஸ்பிரித்துகளைப் பொறுத்தவரையிலும் இந்நிபந்தனை ஏற்புடையதாதல் வேண்டும்), ஆயினும், இங்கு லீற்றர் 20,000 குறைவான வரையறைக்குள் மற்றும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள நோக்கத்திற்காக ஸ்பிரித்து இறக்குமதி செய்யப்படுமாயின், இந்த தீர்வை ஏற்புடையதாகமாட்டாது. | தொகை லீற்றர் ஒன்றுக்கு முந்நூற்று எழுபது ரூபா (370 ரூபா )<br>தொகை லீற்றர் ஒன்றுக்கு நாநூற்று எழுபது ரூபா (470 ரூபா)<br>தொகை லீற்றர் ஒன்றுக்கு எழுநூற்று இருபது ரூபா (720 ரூபா) |
| 3. | சுத்திகரிக்கப்படாத ஈதைல் அற்ககோல் மதுசார வகைகள் (தொழில் நுட்ப மதுசாரம் /பலம் குறைந்த மதுசாரம்). | தொகை லீற்றர் ஒன்றுக்கு நூற்றி ஐம்பது ரூபா (150 ரூபா) |

*10- 909*

---

திருத்தம் செய்தல்

**2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரைத் தீர்வை (விசேட ஏற்பாடுகள்) சட்டம்**

5 ஆம் பிரிவின் கீழான கட்டளை

2012 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதிய 1778/32 ஆம் இலக்க அதிவிசேட வத்தமானியின் பகுதி I : தொகுதி : (I) - பொது பிரிவிலுள்ள அட்டவணையின் இரண்டாம் மற்றும் ஐந்தாம் வரிகளிலுள்ள “இலங்கை அரசாங்கத்தினால் உடமையாக்கப்பட்ட அல்லது சொந்தமாக்கப்பட்ட” என்பதற்குப் பதிலாக “இலங்கை அரசாங்கத்தினால் உடமையாக்கப்பட்ட அல்லது அதன் முகாமைத்துவத்தின் கீழுள்ள” என திருத்தி வாசிக்கப்படல் வேண்டும்.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

நிதி, திட்டமிடல் அமைச்சு,
கொழும்பு 01,

*11- 299*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.